S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE செவ்வாய் டிசம்பர் 16 * 2025 * மலர் -1 * இதழ்-198* VOL-1 * ISSUE-198 விலை ரூ.3 * பக்கம் -4

## உலகக் கோப்பை போட்டியில்

# கேரத்தில் பதக்கம் வென்றவர்களுக்கு ஊக்கத் தொகை!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!!



சென்னை, டிச.16

மாலத்தீவில் நடைபெற்ற 7–வது கேரம் உலகக்கோப்பை போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இந்த வகையில் மாலத்தீவில் நடைபெற்ற 7–வது கேரம் உலகக் கோப்பை போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வி கீர்த்தனா, செல்வி காசிமா, செல்வி மித்ரா ஆகியோர் பதக்கங்கள் வென்றனர். செல்வி கீர்த்தனாவுக்கு 1 கோடி ரூபாயும், செல்வி காசிமாவுக்கு 50 லட்சம் ரூபாயும், மித்ராவுக்கு 40 லட்சம் ரூபாய் என மொத்தம் 1 கோடியே 90 லட்சம் ரூபாய் வழங்குவதாக தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது. அதை முதல்வர் வழங்கினார்.

மேலும், இந்தியன் ஸ்குவாஷ் அகாடமியின் சார்பில் சென்னையில் நடைபெற்ற ஸ்குவாஷ் உலகக் கோப்பை போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணியைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் ஜோஷ்னா சின்னப்பா, அபே சிங், அனஹத் சிங், வேலவன் செந்தில்குமார், ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் இயக்குநர் சைரஸ் போன்சா மற்றும் பயிற்றுநர்கள் ஹரிந்தர் பால் சிங், ஆலன்சோய்சா ஆகியோர் முதல்வரை சந்தித்து, வாழ்த்து பெற்றனர்.



நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அடுத்த வேலம்பாளையம் பகுதியில் ரூ.37 லட்சம் மதிப்பீட்டில் 2 மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்கும் பணிக்கான பூமி பூஜையை அமைச்சர் மதிவேந்தன், ராஜேஷ்குமார் எம்.பி. ஆகியோர் தொடங்கி வைத்தனர். அருகில் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



ஈரோடு மாநகராட்சி ரெயில்வே குடியிருப்பு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமில் கர்ப்பணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். அருகில் பிரகாஷ் எம்.பி., வி.சி. சந்திரகுமார் எம்.எல்.ஏ., மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் அர்பித்ஜெயின் உள்பட பலர் உள்ளனர்.



வடகிழக்கு பருவமழை காலத்திலும் அலங்காநல்லூர் அருகே உள்ள சாத்தையாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. இதனால் அணையின் கொள்ளளவான 27 அடியை எட்டாமல் நீர் குறைந்து காணப்படுகிறது.

## பாலக்கோடு அருகே

# சரக்கு வாகனம் கவிழ்ந்து மீன் வியாபாரி பலி!

## 4 பேர் படுகாயம்!!

பாலக்கோடு, டிச.16

தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் அருகே நாகமரை கிராமத்தைச் சேர்ந்தவர் கோவிந்தராஜ் (52), மீன் வியாபாரி. இவரது மனைவி வளர்மதி. இவர்களுக்கு கோபி என்ற மகனும், கவுசல்யா என்ற மகளும் உள்ளனர். கோவிந்தராஜ் நேற்று முன்தினம் ஆந்திரா சென்று மீன் வாங்கி வருவதற்காக சோளப்பாடியைச் சேர்ந்த வெங்கடேஷ்வரன் என்பவருக்கு சொந்தமான சரக்கு வாகனத்தை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு புறப்பட்டார். அவருடன் அதே பகுதியைச் சேர்ந்த ராமச்சந்திரன் (32), ஆண்டியப்பன் (40), சிவராமன்(35) மற்றும் நடராஜன் (50) ஆகியோர் உடன் சென்றனர். வண்டியை சீனிவாசன் என்பவர் ஓட்டினார்.

ஆந்திராவில் மீன் வாங்கிக் கொண்டு, பாலக்கோடு அருகே கர்த்தாரஅள்ளி நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்த போது, திடீரென தறி கெட்டு ஓடிய அந்த சரக்கு வாகனம் அங்குள்ள சென்டர் மீடியனில் மோதி கவிழ்ந்தது.

இந்த விபத்தில் கோவிந்தராஜ் இடிபாடுகளுக்குள் சிக்கி படுகா யமடைந்த கோவிந்தராஜ் சம்பவ இடத்திலேயே துடி துடித்து உயிரிழந்தார். ராமச்சந்திரன் உள்பட 4 பேர் படுகாயமடைந்தனர்.

இதுகுறித்த தகவலின் பேரில், பாலக்கோடு போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று காயம டைந்தவர்களை மீட்டு தர்மபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

இறந்த கோவிந்தராஜின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். விபத்து குறித்து வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர்.



சுவாமி நெல்லையப்பர் காந்திமதி அம்மன் கோவிலில் திருவனந்தல் சிறப்பு பூஜை சிறப்பு வழிபாடு நிறைவாக சுவாமி தங்கப்பல்லக்கில் புஷ்ப அலங்காரத்துடன் எழுந்தருளி மேளதாளம் முழங்க வீதிஉலா நடைபெற்றது.



தமிழ்நாடு முதலமைச்சர் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு சென்னை மாநகராட்சி, வி.க.நகர் மண்டலம், வார்டு78, நரசிங்க பெருமாள் கோவில் தெருவில் பல்நோக்கு மையக் கட்டடம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின் போது, மேயர் ஆர்.பிரியா மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார், நியமன குழு உறுப்பினர் சொ.வேலு, மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஸ்வரி ஸ்ரீதர், சுமதி, புனிதவதி எத்திராஜன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## மேட்டூர் அருகே நள்ளிரவில் பயங்கரம்:

# ஐ.டி. ஊழியர் வெட்டிக்கொலை!

## போலீசில் வாலிபர் சரண்!!

மேட்டூர், டிச.16–

மேட்டூர் அருகே நள்ளிரவில் ஐ.டி. ஊழியர் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.இன்று காலையில் கொலையாளி கொளத்தூர் போலீசில் சரணடைந்தார். சேலம் மாவட்டம் கொளத்தூர் அருகே உள்ள கருங்கலூர் பகுதியை சேர்ந்தவர் செல்வகுமார் (38), ஐ.டி. ஊழியர். இவரது உறவினர், குமார் (35). இவர்கள் 2 பேருக்கும் மது அருந்தும் பழக்கம் உண்டு. நேற்று இரவு அவர்கள் 2 பேரும் காவேரிபுரத்தில் உள்ள இறைச்சி கடையில் மது குடித்து விட்டு பேசிக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் போதை தலைக்கேறியது. அதையடுத்து அவர்கள் இருவரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் ஆத்திரமடைந்த குமார் தான் வைத்திருந்த பட்டாக்கத்தியால் செல்வகுமாரை சரமாரியாக வெட்டிவிட்டு தப்பி சென்றார். இதில் படுகாயமடைந்த செல்வகுமார் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் பரிதாபமாக உயிரிழந்தார். இதுபற்றி தகவல் அறிந்த கொளத்தூர் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர் . பிணமாக கிடந்த செல்வகுமாரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தினர்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களால் நீர்வளத்துறையின் சார்பில் அறிவிக்கப்பட்ட பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்ட கால்வாய்களை சிறப்பு தூர்வாரும் 154 பணிகளை திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், வரதராஜபுரத்தில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சரும், கழகதுணைப் பொதுச்செயலாளருமான மு.பெ. சாமிநாதன் அவர்களும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் அவர்களும் துவக்கி வைத்தார்கள். உடன் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளருமானஇல.பத்மநாபன், பொள்ளாச்சிநாடாளுமன்றஉறுப்பினர்க.ஈஸ்வரசாமி, தலைமைப்பொறியாளர் (நீர்வளத்துறை) எஸ்.முருகேசன், உடுமலைப்பேட்டைவருவாய் கோட்டாட்சியர்குமார், மடத்துக்குளம்முன்னாள்சட்டமன்றஉறுப்பினர்ஜெயராமகிருஷ்ணன், துறைசார்ந்தஅதிகாரிகள், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.12க்குட்பட்ட சின்னவேடம்பட்டி ஏரியில் அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில், சின்னவேடம்பட்டி ஏரியின் கரையை தூர்வாரி, ஏரியின் கரையை பலப்படுத்தி, சுமார் 1 கி.மீட்டர் நீளத்திற்கு நடைபாதை, மிதிவண்டி தடம் அமைக்கப்பட்டுள்ளதை மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் அவர்கள், மாநகராட்சி ஆணையாளர்மா.சிவகுருபிரபாகரன் இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில், கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி.ப.ராஜ்குமார் அவர்கள், திறந்து வைத்தார். உடன் மாநகராட்சி துணை ஆணையர். குமரேசன், வடக்கு மண்டல தலைவர்வே.கதிர்வேல், உதவி ஆணையர்மகேஸ்கனகராஜ், உதவி செயற்பொறியாளர்சத்தியமூர்த்தி, மண்டல சுகாதார அலுவலர்முருகன், மாமன்ற உறுப்பினர்ராமமூர்த்தி, உதவி பொறியாளர்கள்கோபிநாத், ஜெயின்ராஜ், உத்தமன், சுகாதார ஆய்வாளர்கள்பவுன்ராஜ்விஜயகுமார் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.



திருப்பூர்கிழக்குமாவட்டம்தாராபுரம்கிழக்குஒன்றியத்துக்குட்பட்டகொளத்துப்பாளையம் பேரூராட்சி ராமபட்டினம் ஊர் சுந்தூரி உரூஸ் விழாவில் தமிழ்நாடு மனித வள மேலாண்மை துறை அமைச்சரும் கழக மாநில மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் அவர்களும், தாராபுரம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ஜீவா.கே.கே.துரைசாமி அவர்களும் கலந்து கொண்டார்கள்.உடன் தாராபுரம் ஒன்றிய துணைச் செயலாளர் சி.செல்வகுமார், தி.மு.க. நிர்வாகிகள், ராமபட்டினம்ஜமாத்தார்கள்மற்றும்ஊர்பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



## தேசிய பேரிடர் மீட்பு படையினரின் போலி ஒத்திகை!

திருப்பத்தூர் டிச.16

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த ஆண்டியப்பனூர் நீர் தேக்க ஒடையில் தேசிய பேரிடர் மீட்பு படை அரக்கோணம் ஆய்வாளர் கலையரசன் தலைமையில் வெள்ளத்தில் சிக்கி வரை எவ்வாறு மீட்பது என்பது குறித்து தத்ரூபமாக போலி ஒத்திகை நிகழ்வு நடைபெற்றது.

இதில் நீர்நிலைப் பகுதிகளில் பொதுமக்கள் சிக்கிக் கொண்டால் பேரிடர் மீட்பு படையின் மூலம் எவ்வாறு மற்றொரு கரைக்கு கொண்டு வருவது என்பது குறித்து விளக்கினர். அதேபோல ஒருவர் நீர்நிலைப் பகுதியில் சிக்கிக் கொண்டு உயிரிழந்தவரை படகுமூலம் நீர்நிலைப் பகுதிகளில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு அவரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பது குறித்தும் போலி ஒத்திகையை நிகழ்த்தி காண்பித்தனர். மேலும் தேசிய பேரிடர் மீட்பு படையின் சார்பில் பொதுமக்களுக்கு வெள்ள எச்சரிக்கை உள்ள பகுதிகளில் சூழ்நிலையை எவ்வாறு சமாளிப்பது, அங்கிருந்து எவ்வாறு வெளியேற வேண்டும் என்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் இதில் தேசிய பேரிடர் மீட்பு படையினர், தீயணைப்பு துறையினர், காவல்துறையினர், வருவாய்த் துறையினர், வளர்ச்சித்துறையினர், பொதுப்பணித்துறை நீர் நிலை ஆகிய துறைகள் கலந்து கொண்டு இந்தப் போலிகை ஒத்திகை நிகழ்ச்சியில் தங்களது பங்களிப்பை செய்து காண்பித்தனர்.

## பட்டறை, நகை கடைகளில் பணிபுரியும்
## வடமாநில தொழிலாளர்களுக்கு ஒழுங்கு சான்றிதழ் கட்டாயம்!
### கோவை போலீசார் திட்டம்!!

கோவை, டிச. 16:

நகைப்பட்டறை, நகை கடைகளில் பணி புரியும் வடமாநில தொழிலாளர்கள் ஒழுங்கு சான்றிதழ் வாங்கி வர அறிவுறுத்த போலீசார் திட்டமிட்டுள்ளார். திருட்டு, கொள்ளையை தடுக்க போலீசார் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள உள்ளனர்.

தொழில் நகரமான கோவையில் தங்க நகை தொழிலும் ஒரு முக்கயமான தொழிலாக இருந்து வருகிறது. கோவை காந்தி பார்க், பெரிய கடை வீதி, மாநாக வீதி, கருப்ப கவுண்டர் வீதி, குலாலர் வீதி தியாகி குமரன் வீதி உட்பட பல்வேறு பகுதிகளில் 300க்கும் மேற்பட்ட நகைப்பட்டறைகள், சிறிய, பெரிய தங்க நகை கடைகள் உள்ளன. அங்கு பெரும்பாலும் வடமாநில தொழிலளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களில் சிலர் 2, 3 ஆண்டுகள் பணிபுரிந்து நகைகளை கொள்ளையடித்து தப்பி சென்று விடுகின்றனர். அதேபோல, சில பட்டறைகள் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யாமல் உள்ளனர். இங்கும் கொள்ளையர்கள் சுலபமாக கொள்ளையடித்து தப்பி விடுகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒரு பட்டறையில் 2 கொள்ளையர்கள் சுலபமாக உள்ளே நுழைந்து ஒரு கிலோ தங்க நகைகளை கொள்ளையடித்தனர். அவர்களை போலீசார் 24 மணி நேரத்தில் கைது செய்தனர். மேலும் இதுபோன்று சம்பவங்கள் நடக்காமல் இருக்க போலீசார் தங்க நகை தொழிலாளர்களிடம் பல்வேறு அறிவுரைகளை கூறியுள்ளனர்.

### கோவை மாநகரக் காவல்துறையில்
## ஊர்க்காவல் படையில் சேர விண்ணப்பங்கள்வரவேற்பு!

கோவை, டிச. 16:

கோவை மாநகரக் காவல்துறையில் ஊர்க்காவல் படை ஆட்சேரப்பு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதுகுறித்து கோவை மாநகர போலீசார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியி ருப்பதாவது:

கோவை மாநகர போலீஸ் கமிஷனர் சரவண சுந்தர் உத்தரவுப்படி கோவை மாநகர ஊர்க்காவல் படையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப ஊர்க்காவல்படை தேர்வு நடத்தபபடவுள்ளது. ஆகவே, ஊர்க்காவல் படையில் சேர்ந்து காவல்துறையுடன் இணைந்து பணியாற்ற விருப்பமுள்ள கோவை மாநகர மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் வசிக்கும் ஆண்கள் வருகின்ற 15ம் தேதியன்று (நாளை) மாலை 5 மணிக்குள், கோவை காந்திபுரம் காட்டுர் போலீஸ் நிலைய வளாகத்தில் உள்ள கோவை மாநகர ஊர்க்காவல் யுஎஸ்டிஎல் அலுவலகத்தில் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிப்பவர்களின் கல்வித்தகுதி 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர் மற்றும தேர்ச்சி பெறாதவர்களாக இருக்கலாம். 20 வயது பூர்த்தி அடைந்தவராகவும், 45 வயது நிரம்பாதவராகவும் இருக்க வேண்டும். விண்ணப்பிக்க கடைசி நாள் 31ம் தேதி ஆகும். மேலும் 94981 71363 மற்றும் 9498172525 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறுஅதில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரியல் எஸ்டேட் அதிபர் முன்விரோதத்தில் பொய் புகார்!
### கோவை தி.மு.க. வக்கீல் குற்றச்சாட்டு!!

கோவை, டிச.16–

திமுக வழக்கறிஞர் ரவிக்குமார் மீது ரியல் எஸ்டேட் அதிபர் முரளிதரன் கோவை மாநகர போலீஸ் கமிஷனரிடம் புகார் அளித்ததாக செய்திகள் வெளியானது.

இது குறித்து திமுக வழக்கறிஞர் ரவிக்குமார் கூறும் போது,

கடந்த சில மாதங்களாகவே முரளிதரன் உள்ளிட்டோர் என் மீது உள்ள முன்விரோதம் காரணமாக பொய் புகார்களை அளித்து வருகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன்பு சித்தாப்புதூர் பகுதியில் வேறு ஒரு அலுவலகத்திற்கு சென்று இருந்த சமயத்தில் முரளிதரன் உள்ளிட்டோர் வேண்டுமெறே தகராறு செய்தனர். தற்போது வேண்டுமென்றே பொய் புகார் அளித்து வருகின்றனர். அதனை சட்டப்படி எதிர்கொள்ள தயாராக இருக்கிறேன் என்றார்.

## மனைவி, மகனை தாக்கிய தொழிலாளி கைது!

கோவை, டிச. 16:

கோவை செல்வபுரம் முத்துசாமி காலனியை சேர்ந்தவர் ஆனந்தகுமார். தொழிலாளி. இவரது மனைவி தீபிகா (30). நேற்று முன்தினம் ஆனந்தகுமார் மது குடிக்க தீபிகாவிடம் பணம் கேட்டுள்ளார். அதற்கு அவர் தன்னிடம் பணம் இல்லை என்றுள்ளார்.

இதனால் ஆத்திரம் அடைந்த ஆனந்தகுமார் மனைவி மற்றும் மகனை தகாத வார்த்தைகளால் திட்டி தாக்கி உள்ளார்.

இதுகுறித்து தீபிகா செல்வபுரம் போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து ஆனந்தகுமாரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## கஞ்சா வழக்கு குற்றவாளிகள் 3 பேர் குண்டர் சட்டத்தில் கைது!

கோவை, டிச. 16:

கோவை மாவட்டம், கிணத்துக்கடவு போலீஸ் நிலைய பகுதியில் கடந்த செப்டம்பர் 3ம் தேதி 20 கிலோ கஞ்சாவை விற்பனைக்குவைத்திருந்தஆனந்தகுமார்(27),நரேஷ்குமார் (35) மற்றும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஜான்(31) ஆகியோர்களை கிணத்துக்கடவு போலீசார் கைது செய்து, சிறையில் அடைத்தனர். மேலும், பொது ஒழுங்கு மற்றும் பொது சுகாதாரப் பராமரிப்பிற்கு பாதகமான செயலில் ஈடுபட்ட குற்றத்திற்காக ஆனந்தகுமார், நரேஷ் குமார் மற்றும் ஜான் ஆகியோர்கள் மீது குண்டர்தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க கோவை மாவட்ட எஸ்பி கார்த்திகேயன், மாவட்ட கலெக்டர் பவன்குமாரிடம் பரிந்துரை செய்தார். அப்பரிந்துரையின் பேரில் கலெக்டர் 3 பேர் மீதும் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பித்தார். அவ்வுத்தரவின் அடிப்படையில் கஞ்சா வழக்கு குற்றவாளிகளான ஆனந்தகுமார், நரேஷ் குமார், ஜான் ஆகியோர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## பெருமாள் கோவில்களில் சிறப்பு வழிபாடு!

குமாரபாளையம், டிச, 16

குமாரபாளையம் பெருமாள் கோயில்களில் சிறப்பு வழிபாடு நடந்தது. சனிக்கிழமை நாளையொட்டிகுமாரபாளையம் விட்டலபுரி, பாண்டுரங்கர்கோயிலில்சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேக, அலங்கார, ஆராதனைகள் நடந்தன. பக்தி பாடல்கள் நிகழ்ச்சி நடந்தது. இதே போல் ராமர் கோயில், அக்ரஹாரம் லட்சுமி நாராயண சுவாமி கோயில், திருவள்ளுவர் நகர் சவுந்திரராஜ பெருமாள் கோயில், விட்டலபுரி ராமர் கோயில், கோட்டைமேடு தாமோதர பெருமாள் கோயில், கள்ளிப்பாளையம் பெருமாள் கோயில், தட்டான்குட்டை ஜெய்ஹிந்த் நகர் புருஷோத்தம பெருமாள் கோயில் உள்ளிட்ட பல பெருமாள் கோயில்களில் சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேக, அலங்கார, ஆராதனைகள் நடத்தப்பட்டன. பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டன.



ஸ்வர்கா பவுண்டேஷன் சார்பில் மாற்றுத்திறனாளிகள் நடத்தும் ஸ்வே கஃபே கோவை ப்ரூக்ஃபீல்ட்ஸ் மாலின் கீழ் தளத்தில்துவங்கப்பட்டது.இதனைஸ்வர்காபவுண்டேஷன் நிர்வாக அறங்காவலர் ஸ்வர்ணலதா தொடங்கி வைத்தார்.



திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, தாராபுரம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட காட்டம்பட்டியில் புதிய பகுதி நேர நியாயவிலைக்கடையை திறந்து வைத்தார் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், உடன் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் இல.பத்மநாபன், தாராபுரம் கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் K.K.துரைசாமி, ஒன்றிய துணைச் செயலாளர் செல்வக்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் ஆனந்தி, துறை சார்ந்த அதிகாரிகள்,தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திருப்பூர்மாவட்டம்,பெருமாநல்லூர்பொன்னுசாமிகவுண்டர்மஹாலில்தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கம் மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில் நடைபெற்ற 2025 2026 ஆண்டிற்கான தோட்டக்கலைப் பயிர்களில் நவீன சாகுபடி தொழில் நுட்பங்களை விளக்கும் மாவட்ட அளவிலானவிவசாயிகள்கருத்தரங்கத்தைமாண்புமிகுதமிழ்வளர்ச்சிமற்றும்செய்தித்துறை அமைச்சரும், கழக துணைப் பொதுச்செயலாளருமான மு.பெ. சாமிநாதன் , மனித வள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்து, கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்கள். மேலும் தென்னை நோய் மேலாண்மை குறித்த கையேடுகளை வழங்கினார்கள்.உடன் மேயர் ந. தினேஷ்குமார் , திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவபிரகாஷ் , இணை இயக்குநர்(வேளாண்மை) சுந்தரவடிவேலு, துணை இயக்குநர்(தோட்டக்கலைத்துறை) திருமதி. சசிகலா, திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர் தங்கராஜ், துறை சார்ந்த அதிகாரிகள், தி.மு.க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பணிக்கு முன் | பணிக்கு பின்



பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட, இராஜாஜி நகர் பகுதியில் இருந்த கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டது.



### வாணியம்பாடி
## மிட்டவுன் ரோட்டரி சங்கம், சென்னை அரவிந்த் கண் மருத்துவமனை சார்பில் மாபெரும் இலவச கண் அறுவை சிகிச்சை முகாம்!

வாணியம்பாடி டிச.15

திருப்பத்தூர் மாவட்டம், அம்பலூர் ஊராட்சியில், வாணியம்பாடி மிட்டவுன் ரோட்டரி சங்கம் மற்றும் சென்னை அரவிந்த் கண் மருத்துவமனை சார்பில் மாபெரும் இலவசகண்அறுவைசிகிச்சை முகாம், ஊராட்சி மன்ற தலைவர் ஏ பி. முருகேசன் தலைமையில் நடைப்பெற்றது,

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக Rtn சந்திரசேகர், Rtn.ஜான்சந்துரு மற்றும் சிறப்பு.விருந்தினர்களாக வாணியம்பாடி மிட்டவுன் ரோட்டரி சங்க நிர்வாகிகள் பாஸ்கர், வெங்கடேசன், கிருஷ்ணகுமார், பிரபுசங்கர், அருண்குமார், சக்கரவர்த்தி, வேர்கள் அறக்கட்டளை ரவிந்திரன் சுப்ரமணியன் ,ஒருங்கிணைப்பாளர் போஸ் மற்றம் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதியில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை விடப்பட்ட பெண்களுக்கு உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மனு அளித்த பெண்களுக்கு ரூபாய் வரவு வைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து பெண்கள் மகிழ்ந்து தமிழக முதல்வருக்கு நன்றியை தெரிவித்தனர்.




பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் பெண்கள் உரிமை மற்றும் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில், பெசன்ட் நகர் கடற்கரை சாலையில் நடைபெற்ற விழிப்புணர்வு நடைபயணத்தை (Walkthan) மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் தொடங்கி வைத்துப் பங்கேற்றார். இந்நிகழ்வில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஆர்.வி.ஷஜீவனா தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் புதுக்கோட்டை விஜயா, தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃப்தாப் ரசூல், மாநகராட்சி பாலின மற்றும் கொள்கை ஆய்வக குழுத் தலைவர் முனைவர் லெஜிஸ், தோழமை தொண்டு நிறுவன இயக்குநர் ஏ.தேவனேயன் மற்றும் அலுவலர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, மெரினா நீலக்கொடி கடற்கரைப் பகுதியினை தூய்மையாகப் பராமரித்திடும் வகையில் மக்களின் பயன்பாட்டிற்காக மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியே குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளது.



# அகரம் கிராமத்தில் பா.ம.க. காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றிய பொதுக்குழு கூட்டம்!

## ஒன்றிய செயலாளர் சாமு தலைமையில் நடைபெற்றது!!

கிருஷ்ணகிரி டிச.16

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே உள்ள காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஜி. ஷாமு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்வது எப்படி?' என்பது குறித்து நிர்வாகிகளிடையே விரிவான ஆலோசனைகள் நடத்தப்பட்டன.

அரசியல் நிலைப்பாடு, "வரும் சட்டமன்றத் தேர்தல் பாட்டாளி மக்கள் கட்சிக்கு ஒரு திருப்புமுனையாக அமைய வேண்டும். என்று மாவட்ட தலைவர் ஆறுமுகம் எடுத்துரைத்தார் இதில் சிறப்பு அழைப்பாளர்களாக அன்புமணி தம்பிகள் படை மாநில செயலாளர் அன்பழகன், இளைஞர் சங்க மாநில துணை செயலாளர் வன்னிய பெருமாள், மாவட்ட செயலாளர் பழனிவேல் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர் கள் நாம் அனைவரும் இப்போதிலிருந்தே தீவிரமாகச் செயல்பட வேண்டும்" என்று வலியுறுத்தினார். ஒன்றிய, கிளை மற்றும் வார்டு நிலையிலான கட்சி நிர்வாகிகள் பலரும் கூட்டத்தில் கலந்துகொண்டு, தேர்தலில் வெற்றி பெறுவதற்கான தங்களது ஆலோசனைகளையும், களப்பணி தொடர்பான கருத்துகளையும், தொகுதி வாரியான அணுகுமுறைகளையும் முன்வைத்தனர். பூத் கமிட்டிகளை பலப்படுத்துவது, கிராமங்கள் தோறும் மக்களைச் சந்தித்து கட்சித் திட்டங்களை எடுத்துரைப்பது, இளைஞர்கள் மற்றும் மகளிரை அதிகளவில் கட்சியில் சேர்ப்பது ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தின் முடிவில், வரும் சட்டமன்றத் தேர்தலில் பர்கூர் தொகுதியில் பாட்டாளி மக்கள் கட்சியின் வெற்றிக்காக அனைவரும் ஒற்றுமையுடன் உழைப்பது என உறுதி ஏற்கப்பட்டது. இதில் மாவட்டத் துணைத் தலைவர் பெரியண்ணன், மாவட்ட ஊடகப்பிரிவு செயலாளர் முனியப்பன், ஒன்றிய தலைவர் மாதேஷ், கவுன்சிலர் தமிழ்சங்கர், பில்லா மாதேஷ், பசுமைத்தாயகம் மணி, ஆசிரியர் கூட்டணி மணி, சரவணன், செந்தில்குமார், மாது, திருப்பதி, வேடியப்பன், ராஜேஷ், செந்தில்குமார், சந்திரசேகர், குமார், கிருபாகரன், வேடி, செந்தில், முனியப்பன், வசந்தகுமார், உள்ளிட்ட நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், அணித் தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் எனப் பலரும் உற்சாகத்துடன் பங்கேற்றனர். இக்கூட்டத்தின் மூலம் தேர்தல் களத்திற்கான ஆயத்தப் பணிகளை பாட்டாளி மக்கள் கட்சி தீவிரப்படுத்தியுள்ளது தெளிவாகிறது. இதைதொடர்ந்து கட்சி தொண்டர்களுக்கு பசுமைத் தாயகம் சார்பில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது இறுதியில் மாவட்ட துணை செயலாளர் பெரியண்ணன் நன்றி கூறினார்.

# தூத்துக்குடியில் 2 ம் கட்ட மகளிர் உரிமைத்தொகை: 4042 பேருக்கு அமைச்சர்கள் வழங்கினார்கள்!

தூத்துக்குடி டிச.16

தமிழக அரசின் சார்பில் 2ம் கண்ட மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தை சென்னையில் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதனையடுத்து தூத்துக்குடியில் அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்ற விழாவிற்கு கலெக்டர் இளம்பகவத் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் வரவேற்புரையாற்றினார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் மகளிர் உரிமைத்தொகை திட்டப் பயனாளிகள் 4042 பேருக்கும், தொழில்கடன் பயனாளிகளுக்கும், வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன், தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், மீன் வளம் மற்றும் மீனவர் நலன், கால்நடைபராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் வழங்கினார்கள். தாட்கோ மூலம் தொழில்கடன் 2 பேருக்கு 1லட்சத்து 7 ஆயிரம் ரூபாயும், மாவட்ட தொழில் மையம் மூலம் தொழில்கடன் 2 பேருக்கும், மருத்துவ காப்பீடு அட்டை 2 பேருக்கும் வழங்கப்பட்டது.

விழாவில் கூடுதல் கலெக்டர் ஐஸ்வர்யா, துணை கலெக்டர் மகேந்திரன், பயிற்சி கலெக்டர் புவனேஸ்ராம், எம் எல்ஏக்கள் ஊர்வசி அமிர்தராஜ், மார்க்கேண்டயன், சண்முகையா, மேயர் ஜெகன் பெரியசாமி, கோட்டாட்சியர் பிரபு, தாசில்தார்கள் திருமணி ஸ்டாலின், இசக்கி முருகேஸ்வரி, மாவட்ட சமூகநல அலுவலர் பிரேமலதா, மாவட்ட தாட்கோ மேலாளர் ஜெனிசிஸ்; ஷிபா, வருவாய் அலுவலர் குமரன், கிராமநிர்வாக அலுவலர்கள் ராஜலெட்சுமி, விஜயமூர்த்தி, திரேஸ் அம்மாள்,ன் உள்பட பலர் கலந்து கொண்டனர். சமூக பாதுகாப்பு திட்டம் தனித்துணை ஆட்சியர் வள்ளி நன்றியுரையாற்றினார்.

# அமைச்சர் அனிதாராதாகிருஷ்ணன் மீது சொத்துகுவிப்பு வழக்கு!

## விசாரணை ஒத்திவைத்து உத்தரவு!!

தூத்துக்குடி டிச.16

அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மீது சொத்துக் குவிப்பு வழக்கு கடந்த 2006 இல் லஞ்ச ஒழிப்புத் துறையால் பதிவு செய்யப்பட்டு, வழக்கு விசாரணை தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கு விசாரணைதற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. நீதிமன்றத்தில் அமைச்சர் தரப்பு சாட்சிகளிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றபோது, அமைச்சரின் மனைவி, சகோதரர்கள் யாரும் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை.

அமைச்சரின் மூன்று மகன்களில் ஒருவரான அனந்த மகேஸ்வரன் மட்டுமே ஆஜர் ஆனார். இதையடுத்து, வழக்கை விசாரிக்கும் மாவட்ட நீதிபதி வசந்தி, அடுத்த கட்ட விசாரணையை டிச. 17ஆம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

# கால்வாய் அடைப்பு சரி பார்ப்பு; ஆய்வு ஆய்வு!

தூத்துக்குடி டிச.16

தூத்துக்குடி மாநகர் பகுதியில் மழைக்காலங்களில் சில தெருக்களில் கழவுநீர் வழித்தடங்களில் கழிவு நீர் செல்லாமல் வீடுகளில் தேங்கி இருப்பதாக 36வது வார்டுக்குட்பட்ட போல்டன்புரம் பகுதி பொதுமக்கள் மேயர்



ஜெகன் பொரியசாமிக்கு புகார் அளித்தனர். இதனையடுத்து போல்டன்புரம் மூன்றாவது தெரு பகுதியில் உள்ள கழிவுநீர் வழித்தடங்களில் உள்ள அடைப்புகளை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என்று மாநகராட்சி சுகாதார அலுவலர் ராஜபாண்டிக்கு உத்தரவிடப்பட்டது அதன் அடிப்படையில் சுகாதார அலுவலர் ராஜபாண்டி சுகாதாரத்துறை அலுவலா்கள் மற்றும் பணியாளர்களுடன் நேரில் சென்று அந்தப் பகுதியை பார்வையிட்டபோது கழிவு நீர் செல்லும் வழித்தடங்களில் சுமார் 4 அடி உயரத்திற்கு மணல் தேங்கி அடைப்பு இருப்பதை கண்டறியப்பட்டது உடனடியாக மாநகராட்சி சுகாதாரப் பணியாளர்கள் மணல்களை அப்புறப்படுத்த களத்தில் இறங்கினார்கள். சுமார் 20 அடி நீளத்துக்கு கழிவுநீர் வழித்தடத்தில் 5 அடிக்கு மேல் தேங்கியிருந்த மணல் முழுவதும் அப்புறப்படுத்தப்பட்டது அந்த பணிகளை மாநகராட்சி மேயர் ஜெகன்பொரியசாமி நேரில் சென்று பார்வையிட்டார். ஆய்வின் போது வட்டச்செயலாளர் ரவீந்திரன், பகுதி பிரதிநிதிகள் பிரபாகா், ஜேஸ்பா், உள்ளிட்ட அலுவலா்கள் உடனிருந்தனா்.



# விஜய் பார்க் இன் லாட்ஜ் திறப்பு; எஸ்.ராஜேந்திரன் திறந்து வைத்தார்!

திருப்பத்தூர் டிச.16

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த பெரியகுளம் அருகே அமைந்துள்ள விஜய் பார்க் இன் லாட்ஜ் இன்று திறப்பு விழா நடைபெற்றது இந்த நிகழ்ச்சியின் திருப்பத்தூர் திமுக நகர செயலாளர் s.ராஜேந்திரன் சிறப்பாளப்பாளராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார் விஜய் பார்க் இன் லாட்ஜ் உரிமையாளர் எஸ். சுரேஷ் அகிலா அவர்கள் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து இங்கு ஏழு ரூபங்கள் கொண்டுள்ளன ரூமில் அனைத்து வசதிகளும் உள்ள நிலைகள் பேருந்து அருகாமையில் இருப்பதால் பொதுமக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது எனவே இதனை குறைந்த விலையில் வாடகைக்கு விடப்படும் எனவும் தெரிவித்துள்ளனர் இந்த நிகழ்ச்சிகள் வார்டு கவுன்சிலர்கள் சபீனா ரசாக் குட்டி என்கின்ற சீனிவாசன் மற்றும் பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் விக்டோரியா தெருவில் வசித்து வரும் அருள் என்பவரின் வீட்டில் பிளாஸ்டிக் டப்பாவில் மரநாய் சிக்கி இருந்ததைப் பார்த்த அருள் உடனடியாக தீயணைப்புத் துறைக்கு தகவல் தெரிவித்தனர் அங்கு விரைந்து சென்ற கோபாலகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் மரநாய் உயிருடன் பிடித்து வனத்துறை முன்னிலையில் வனப்பகுதியில் விடப்பட்டது.



கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம், வார்டு எண்.32க்குட்பட்ட பாலுசாமி நகர் மற்றும் முருகன் நகர் ஆகிய பகுதிகளில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையங்கள் அமைக்கும் பணியினை மாண்புமிகு மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகராட்சிஆணையாளர்ம.சிவகுருபிரபாகரன்ஆகியோர்முன்னிலையில்,கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி.ப.ராஜ்குமார் , துவக்கி வைத்தார். உடன் மாநகராட்சிதுணை ஆணையாளர் த.குமரேசன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் ஜெயலதா, மத்திய மண்டல தலைவர் மீனாலோகு, உதவி ஆணையர் செல்வி. நிதியா, செயற்பொறியாளர் கருப்பசாமி, உதவி செயற்பொறியாளர் குமரேசன், மாமன்ற உறுப்பினர் பார்த்திபன், மண்டல சுகாதார அலுவலர் குணசேகரன், உதவி பொறியாளர் சரவணக்குமார் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.



பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளில் குடியிருப்பு வாசிகள் தரும் தகவலின் அடிப்படையில், ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் உள்ளிட்ட பழைய பொருட்கள் அகற்றும் சேவை நடைபெற்று வருகிறது, இதன் ஒரு பகுதியாக, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு 109, பஜனைகோவில் 1வது தெருவில் உள்ள வீட்டிலிருந்து பழைய சோஃபாக்கள் உள்ளிட்ட பழைய பொருட்கள் அகற்றப்பட்டன.

## திறன் நிலையில் உள்ள மாணவர்களுக்கு

# அரசால் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் 100 சதவீதம் அடிப்படைத்திறனை அடைந்திடும் வகையில் பயிற்சி!

## முதன்மைக்கல்வி அலுவலர் சண்முகம் அறிவுறுத்தல்!!

புதுக்கோட்டை, டிச.16

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும், ஆதிதிராவிடர் நலம்,மாநகராட்சி உயர்நிலை, மேல்நி லைப் ப ள்ளிகளின் தலைமை யாசிரியர்களின் கூட்டம் முதன் மைக் கல்வி அலுவலக வளாகத் தேர்வுக்கூட அரங்கில் நடை பெற்றது.



கூட்டத்திற்கு முதன்மைக்கல்வி அலுவலர் சண்முகம் தலை மை தாங்கி பேசும் போது கூறியதாவது, அரையாண்டுத்தேர்வினை எவ்வித புகாருக்கும் இடமளிக்காத வகையில் சிறப் பாக நடத்தி ஒவ்வொரு பள்ளியிலும் அரசுப்பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களின் தேர்ச்சி சதவீதத்தினை 100 சதவீதம் பெற்றிடும் வகையில் சிறப்பான பயிற்சி அளித்திடும் வகை யில் ஆசிரியர்களுக்கு வழிகாட்டிட வேண்டும். 6,7,8,9 ஆகிய வகுப்புகளில் தமிழ், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் கண்டறியப்பட்ட திறன் மாணவர்களுக்கு அர சால் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் 100 சதவீதம் அடிப்ப டைத் திறனை அடைந்திடும் வகையில் பயிற்சி அளிப்பதை தலைமை யாசிரியர்கள் உறுதி செய்யவேண்டும். குறிப்பாக மாணவர்கள் கல்வி உதவித்தொகை பெறுவது சார்ந்து வங் கி கணக்கிணை ஆதாருடன் இணைத்தல், கைரேகை பதிவி னை புதுப்பித்தல் உள்ளிட்ட நிலுவையாக உள்ள பல பிரச்சி னைகளை கண்டறிந்து தகுதியுள்ள ஒவ்வொரு மாணவரு க்கும் கல்வி உதவித்தொகை கிடைப்பதை உறுதி செய்திட வேண்டும் மாணவ, மாணவிகளுக்கு அவ்வப்போது வழங்கப்படும் நலத்திட்டங்களை கல்வியியல் தகவல் மேலாண்மை முறைமை யில் ( EMIS) பதிவேற்றம் செய்திடவேண்டும். மத்திய கல்வி அ மைச்சகத்தின் கீழ் இயங்கும் கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை பிளஸ் புதுப்பித்தல்( UDISE PLUS) பணி யினை குறித்தல் காலத்திற்குள் முடித்திடவேண்டும். போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு தொடர் செயல்பாடு களை தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும். வளரும் தொழில் நுட்பத்திற்கேற்ற வகையில் செயலிகளை பயன்படுத்தி பாட ம் கற்பிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

அவ்வப்போது கோரப்படும் தகவல் மீது தலைமை யாசிரியர் கள் தனிக்கவனம் செலுத்தி பள்ளியின் வளர்ச்சியினை மேம்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.



கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் கிழக்கு ஒன்றிய தேமுதிக சார்பில் விஜய்பிரபாகரன் அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு பொது மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

# அதிமுக அமைச்சரவையில் பொறுப்புடன் பேசிய ஒரே அமைச்சர் பழனியப்பன்

## திருமண இல்ல விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்







### முதல்வர் பேச்சு

தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி அருகே முன்னாள் அமைச்சர் பழனியப்பனின் இல்ல திருமண விழா பிரமாண்டமாக நடைபெற்றது.

மணமக்கள் எழில் மறவன் மற்றும் கிருத்திகா ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்து, திருமணத்தை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நடத்திவைத்தார்.

இந்த விழாவில் கூட்டணி கட்சி தலைவர்கள் திருமாவளவன், கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி தலைவர் ஈ.ஆர். ஈஸ்வரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச்செயலாளர்முத்தரசன்உள்ளிட்டோர்,நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

திருமண நிகழ்ச்சிக்குப் பிறகு பேசிய

முதல்வர் ஸ்டாலின், “தமிழ்நாட்டில் ஜிடிபி வளர்ச்சியில் நாம் முன்னணியில் உள்ளோம். இதை எங்கள் அரசு கூறவில்லை, ரிசர்வ் வங்கியே வெளியிட்டுள்ளது. சோதனைகள் அனைத்தையும் தாண்டி சாதனை படைத்திருப்பது திராவிட மாடல் ஆட்சியே” என தெரிவித்தார். “பெண்களுக்கு நலத்திட்டமாக மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குவது மூலம் இதுவரை ஒரு கோடியே 30 லட்சம் பெண்களுக்கு பலன் கிடைத்துள்ளது. இன்னும் தகுதி பெற்றவர்கள் விடுபட்டு இருந்தால், அவர்கள் மனு அளித்தால் நிச்சயம் உரிமைத் தொகை வழங்கப்படும்” என்றும் கூறினார்.

அதிமுக ஆட்சிக் காலத்தை நினைவுபடுத்திய அவர், “அந்த அமைச்சரவையில் எந்த ஊரின் அமைச்சரும் பொறுப்பாக பேசியதில்லை.

ஒரே ஒருவரே பொறுப்புடன் பேசியவர் — அதுவும் பழனியப்பன். மற்ற அமைச்சர்கள் பேசும்போது பல முறை நாங்கள் நடுவில் வெளியேறியதுண்டு. ஆனால் பழனியப்பன் பேசும்போது நாங்கள் அமைதியாக கவனித்தோம். ஜனநாயக கண்ணியம், அன்பு மற்றும் நாகரிகத்துடன் நடந்துகொண்டவர் அவர்” என பாராட்டினார். அதேவேளை, “தமிழ்நாட்டின் வளர்ச்சி தொடர வேண்டும், அதில் அனைவருக்கும் பங்கு இருக்கிறது” எனவும் அவர் வலியுறுத்தினார்.



### திருப்பரங்குன்றம் சம்பவம் :

## மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் முயற்சி!

### தொல். திருமாவளவன் குற்றச்சாட்டு

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி அருகே மோளையானூர் ஆண்டாள் நகர் கலைஞர் திடலில் நடைபெற்ற திரு. பழனியப்பன் மகன் எழில்மறவன் கீர்த்திகா இணைதிருமண நிகழ்ச்சியில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

நிகழ்ச்சிக்குப் பிறகு செய்தியாளர்களை சந்தித்த அவர், “நாட்டில் நிலவும் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்க பாஜக மற்றும் சங்க பரிவார் இயக்கங்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

திருப்பரங்குன்றம் அதற்கு ஒரு எடுத்துக்காட்டு. அங்கு பல ஆண்டுகளாக இஸ்லாமியரும் இந்துக்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

ஆனால் தற்போது மதத்தின் பெயரில் வன்முறைக்கு வித்திடும் சதி நடைபெறுகிறது,” என்றார்.அவர்

மேலும், “நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் வழங்கிய தீர்ப்பு கவலையளிக்கிறது; நீதித்துறையையும் சங்கபரிவார் கோட்டத்தில் ஈடுபடுத்தும் முயற்சிகள் நடக்கின்றன. இதை எதிர்த்து நாடாளுமன்ற எதிர்க்கட்சியைச் சேர்ந்த 108 உறுப்பினர்கள், அவரை பதவியில் இருந்து நீக்கும் தீர்மானத்தை மக்களவைத் தலைவரிடத்தில் வழங்கியுள்ளோம்,” என கூறினார்.

திமுக கூட்டணியில் இருக்கிறோம்; விருப்ப மனு அவசரமில்லை

திமுக கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தொடரும் என்றும், விருப்பு மனு கொடுக்கும் அவசியம் தற்போது இல்லை என்றும் திருமாவளவன் தெளிவுபடுத்தினார். “உரிய நேரத்தில் திமுகவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, உறுதியாக வழங்கப்படும் தொகுதிகளை கருத்தில் கொண்டு மனுக்களை சமர்ப்பிப்போம்,” என்றார்.சாதி கணக்கெடுப்பு தேசிய அளவில் நடத்தப்பட வேண்டும்

சாதிவாரி கணக்கெடுப்பு குறித்து அவர் பேசும்போது, “இந்திய ஒன்றிய அரசே இதை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் அது சட்டபூர்வமான சென்சஸ் ஆகும். பாமகவின் ஒரு பிரிவு இதற்கான கோரிக்கையைக் கொண்டு கடிதம் அனுப்பினாலும், அது தேர்தல் அரசியல் நோக்கத்துடன் இருப்பதாகவே பார்க்கிறேன்,” என்றார்.



